விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 21 திங்கட்கிழமை (04.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 167

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# பம்பைமடுவில் கடும்மோதல்

## 60 படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு

## 50 விடுதலைப்புலிகள் பலி தாக்குதல் முறியடிப்பு

### புலிகள் அறிவிப்பு

(கிளிநொச்சி)

மன்னாரில் பாரிய படைநகர்விற்காக நிலை கொண்டிருந்த இராணுவத்தினர்மீது பாரிய தாக்குதல் நடாத்தி படையினருக்கு பெரும் அழிவினை ஏற்படுத்தி படையினரை பின்தள்ளியுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.தாக்குதல் குறித்து விடுதலைப்புலிகள் வெளியிட்ட அறிக்கையில், மன்னாரில் எல்லைப் பகுதியில் இருந்து பாரிய படை நடவடிக்கைக்காக முள்ளிக்குளம் , விளாத்திக்குளம் பகுதிகளுக்கு இராணுவத்தினர் நகர்ந்துள்ளனர்.

இவ் நகர்வுப் படையினர் மீது நேற்று முன்தினம் மாலை 7 மணி முதல் விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதலை நடாத்தியுள்ளனர்.விடுதலைப்புலிகளின் தாக்குதலின் போது பாரிய இழப்புக்களுடன் படையினர் பின்வாங்கியுள்ளதுடன்,பாரிய படைநடவடிக்கைக்காக வவுனியா பம்பைமடுவில் இராணுவத்தினர் அமைத்திருந்த ஆட்லறித் தளமும் அழிக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதல் சம்பவத்தின்போது 60க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டதாகவும்;

பெரும் எண்ணிக்கையிலான படையினர் காயமடைந்துள்ளதாகவும் கொல்லப்பட்ட படையினரின் 15 சடலங்களைத் தாம் கைப்பற்றியுள்ளதாகவும் விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.இத் தாக்குதலின் போது கவசவாகனம் மற்றும் ரக் வண்டியொன்றும், ஏ.கே.எல். எம்.ஜிக்கள் ,ரி-56 ரக துப்பாக்கிகள் ,40 மில்லி மீற்றர் குண்டு செலுத்தி, 60 மில்லி மீற்றர் மோட்டார்கள் உள்ளிட்ட ஏராளமான வெடிபொருட்கள் என்பன விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

படையினரின் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்ட பகுதிகள் விடுதலைப்புலிகளால் பலப்படுத்தப்பட்டுவருகின்றன. இவ் வெற்றிகரமான தாக்குதலின்போது 18 போராளிகள் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

(ரு-5,3)





### படைத்தரப்புத் தகவல்

(கொழும்பு)

வவுனியா நகரை அண்மித்த பம்பை மடுப்பிரதேசத்திலும் அதற்கு அப்பால் வடமேற்கே உள்ள வவுனியா, மன்னார் மாவட்டங்களின் எல்லைப்புறக் கிராமப்பிரதேசங்களிலும் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினமிரவு தொடக்கம் கடும் சமர் இடம்பெற்றதாக இரு தரப்பினரும் தெரிவித்துள்ளனர்.வவுனியா-மன்னார் வீதியில் உள்ள பம்பைமடு இராணுவத்தளத்தின் மீது நேற்று முன்தினமிரவு 9 மணிக்கு எறிகணை மற்றும் மோட்டார்த் தாக்குதல் நடத்தி உட்புகுவதற்கு மேற்கொண்ட விடுதலைப் புலிகளின் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக இராணுவம் கூறியுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவம் நடத்திய எறிகணைத்தாக்குதலில் விடுதலைப்புலிகளின் பீரங்கி நிலைகள் நிர்மூலமாக்கப்பட்டு பலத்த உயிர்ச்சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் இந்த மோதலின் போது 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 20 பேர் காயமடைந்துள்ளதாகவும் இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.விடுதலைப்புலிகள் தரப்பில் 50 பேர் வரை பலியாகியுள்ளதாகவும் படையினர் பெருமளவிலான ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் கூறுகின்றார்.

இச் சம்பவத்தில் காயமடைந்த 20 படையினர் வவுனியா மற்றும் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விடுதலைப்புலிகள் இராணுவத்தினரது ஆயுதக்களஞ்சியத்தினை இலக்குவைத்தே இத் தாக்குதலினை நடத்தியுள்ளதாகவும் அதனை எதிர்த்து இராணுவம் பதில் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் மையம் தெரிவித்துள்ளது. இராணுவத்தினரது பதில் தாக்குதல் காரணமாக விடுதலைப்புலிகளுக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என்றும் தகவல் மையம் மேலும் தெரிவித்துள்ளது.

(ரு-5,3)

## தமிழ் மக்களை வெளியேறக் கோருவதன் மூலம் வட-கிழக்கை தமிழர் தாயகம் என அரசு ஏற்கிறதா?

ஐ.தே.கட்சி பொதுச்செயலாளர் கேள்வி

### நாட்டில் குழப்பநிலை

## விசேட அமைச்சரவை மாநாட்டிற்கு ஜனாதிபதி மகிந்த அழைப்பு

## ஐ.தே.கட்சி பொதுச்செயலாளர் கேள்வி

(கொழும்பு)

கொழும்பில் உள்ள விடுதிகளில் தங்கியுள்ள வடக்குக் கிழக்கு மற்றும் மலையக பிரதேச மக்களை வெளியேறுமாறு பொலிஸார் கோருவது அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும்.

வடக்குக் கிழக்கு மக்களை மீண்டும் அப்பகுதிக்கே செல்லுமாறு கோருவதன் மூலம் அரசாங்கம் வடக்குக் கிழக்கு மாகாணங்களானது தமிழ் மக்களின் தாயகபூமி என்பதனை ஏற்றுக்கொள்கின்றதா? அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை ஐக்கிய தேசியக்கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது என்று கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் எந்தவிதமான காரணங்களுமின்றி தங்கியுள்ள தமிழ் மக்கள் வெளியேற்றப்படுவார்கள் என்று பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளமை குறித்து கேட்டபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ் விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கொழும்பில் உள்ள விடுதிகளில் தங்கியுள்ள வடக்கு-கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்களை வெளியேறுமாறு பொலிஸார் கோரினர் என்று கடந்த வியாழக்கிழமை தெரிவிக்கப்பட்டிருந்தமையினால் கொழும்பில் சிக்கல் நிலைமை தோன்றி இருப்பினும் இவ் விடயம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள பொலிஸ்மா அதிபர்,

காரணம் இன்றி கொழும்பில் தங்கியுள்ள தமிழ் மக்கள் வெளியேற்றப்படுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். (06 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த அழைப்பு

(கொழும்பு)

விசேட அமைச்சரவை மாநாடொன்றிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று அழைப்பு விடுத்துள்ளார். நாட்டில் தற்போதுள்ள போர்ச் சூழல் காரணமாக ஏற்பட்டுள்ள குழப்பநிலை தொடர்பாக ஆராய்வதற்காகவே இவ் விசேட அமைச்சரவை மாநாட்டை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று கூட்டவுள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் இடம் பெறும் கிளைமோர்த் தாக்குதல் மற்றும் கடத்தல் சம்பவங்கள், பம்பைமடுத் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் இம் மாநாட்டில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## யப்பான் விசேடதூதுவர் அகாசி நாளை கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

யப்பானின் சிறப்பு பிரதிநிதியான யசூசி அகாசி நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பு வரவுள்ளார். கொழும்பு வரும் அவர், அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தற்போது இடம் பெற்று வரும் மோதல்களை நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பிக்க முயற்சி எடுப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


இது தொடர்பாக கொழும்பில் உள்ள யப்பானிய தூதரகத் (06 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட 3-வது நாளே ரவீந்திரநாத் படுகொலை?

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.ரவீந்திரநாத் கடத்தப்பட்டு மூன்று நாட்களிலேயே படுகொலை செய்யப்பட்டதாக இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கொழும்பில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கு அண்மையில் வைத்து கடந்த வருடம் டிசம்பர் 15 ஆம் திகதி கடத்தப்பட்ட துணைவேந்தர் எஸ்.ரவீந்திரநாத் உடனடியாகவே வெலிகந்தை பிரதேசத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் அவரை கடத்தியவர்கள் மூன்று நாட்கள் அங்கு அவரை தடுத்துவைத்திருந்து விட்டு அவரைப்படுகொலை செய்திருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (02 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை செ.ச.பணியாளர் இருவர் கொழும்பில் கடத்தப்பட்டு கொலை



(கொழும்பு)

நேற்று முன்தினமிரவு தம்மை சி.ஐ.டி. எனக் கூறிக் கொண்டவர்களால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தைச் சேர்ந்த 2 உத்தியோகத்தர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரத்தினபுரி மாவட்டம் கிரியல்ல என்னுமிடத்தில் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் (06 ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம நேற்று சிங்கப்பூரில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ஹேற்றைச் சந்தித்த போது...

# உல்லாசப் பயணிகளின் வருகை முற்றாக வீழ்ச்சி!

## விடுதிகள் மூடப்படும் அபாயம்

(கொழும்பு)

இலங்கையில் விடுதி தொழில்துறை முற்றாக முடங்கிப் போகும் நிலையை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இடம்பெற்று வரும் மோதல்களினால் உல்லாசப் பயணிகளின் வரவில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்குக் காரணம் எனவும், வட மத்திய மாகாணத்தில் உள்ள விடுதிகள் முற்றாக வெறிச்சோடியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

சிகிரியா விலேஜ் விடுதியிலுள்ள 123 அறைகளில் 5 அறைகளில் மட்டுமே பயணிகள் தங்கியிருப்பதாகவும் அதிலும் ஒருவரே வெளிநாட்டவர் எனவும் அதன் பொதுமுகாமையாளர் மரியஸ் பெரேரா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தற்போது எம்மிடம் எந்த முன்பதிவுகளும் இல்லை. கட்டுநாயக்கா வான்படைத் தளத்தின் மீதான தாக்குதலைத் தொடர்ந்து உல்லாசப் பயணிகளின் வரவில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஒரேஒரு அனைத்துலக வானூர்தி நிலையத்தை இரவு 10 மணியுடன் மூடுவதாக எடுக்கப்பட்ட முடிபானது உல்லாசப் பயணத்துறையை கடுமையாகப் பாதித்துள்ளது.

நாம் விடுதிகளை நட்டத்திலேயே நடாத்தி வருகின்றோம். இது தொடர்ந்தால் விடுதிகளை மூடுவதனைத் தவிர எமக்கு வேறு வழிகளில்லை. உல்லாசப் பயணிகளின் வரவு குறைந்ததனைத் தொடர்ந்து எமது பணியாளர்கள் வேறுவேலைகளைத் தேடி வருகின்றனர். சிலர் மாலைதீவுக்கும் சென்றுள்ளனர். அவர்களது பிரதான ஊதியமாக இருப்பது அன்பளிப்புக்களே. நாம் அவர்களை குற்றஞ்சாட்ட முடியாது. (ந-5)

# திருமணத்தின் மூலம் குடியுரிமை பெறும் உரிமை கணவனுக்கோ, மனைவிக்கோ உண்டு

## இலண்டன் மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு

(இலண்டன்)

திருமணங்கள் மூலம் பிரிட்டனில் குடியுரிமை பெறுவதற்கு பிரிட்டன் அரசு கொண்டு வந்த விதிகள் சட்டவிரோதம் என்று அந்த நாட்டு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பிரிட்டனில் குடியேறுவோர் குடியுரிமை பெற அந் நாட்டைச் சேர்ந்தவர்களைத் திருமணம் செய்து கொண்டதாகப் போலியான ஆவணங்களையளிக்கின்றனர்.

அதுபோல ஆண்டுதோறும் ஆயிரக் கணக்கானோர் பிரிட்டன் குடியுரிமை பெற்று வந்தனர். இதைத் தடுக்க திருமணங்கள் செய்து கொள்வோரில் மனைவி அல்லது கணவருக்கு பிரிட்டன் குடியுரிமை மறுக்கும் வகையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன் சட்டவிதிகள் கடுமையாக்கப்பட்டன.

வெளிநாட்டுப் பெண்ணை திருமணம் செய்து கொண்ட ஒருவர், தனது மனைவிக்கு குடியுரிமை கோரியபோது அது நிராகரிக்கப்பட்டது. அதை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் பிரிட்டன் கொண்டு வந்த கடுமையான சட்ட விதிமுறைகள் சட்டவிரோதமானவை என்று தீர்ப்பளித்தது.

பிற நாட்டைச் சேர்ந்தவர்களைத் திருமணம் செய்து கொள்வோர் தங்களது மனைவி அல்லது கணவருக்கு பிரிட்டன் குடியுரிமை பெறுவதைத் தடுப்பது மனித உரிமை மீறல். அவர்களுக்குக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பக்ஸ்டன் கூறியுள்ளார்.

ஒவ்வொரு தம்பதி பற்றி தனித்தனியாக முறைப்படியான விசாரணைக்குப்பிறகு, குடியுரிமை அளிக்கும் வகையில் திட்டம் கொண்டு வரவேண்டும் என்றும் நீதிபதி யோசனை கூறியுள்ளார்.

பிரிட்டனில் குடியுரிமை பெற்றுள்ள இலங்கையுள்ளிட்ட வெளிநாட்டவர்கள் தங்கள் நாட்டவர்களைச் சேர்ந்தவர்களைத் திருமணம் செய்து கொள்வதில் இருந்து வந்த சிக்கல் இப்போது தீர்க்கப்பட்டுள்ளது. (ந-5)

# ஆசிரியர் நியமனம்

## நியமனக் கடிதம் ஜனாதிபதி வழங்குவார்

(கொழும்பு)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் டிப்ளோமா பட்டம் பெற்ற 2 ஆயிரத்து 600 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ் முதலாவது கட்டப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் பிரகாரம் தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமா பட்டத்தில் உயர் சித்தி அடைந்த 450 பேருக்கு ஆசிரியர் நியமனக் கடிதம் அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் இன்று வழங்கப்படவுள்ளது. (ந-3)

# கொழும்பில் திடீர் சோதனை கண்டபாட்டில் தமிழர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பு உள்ளிட்ட தென்பகுதியில் படையினரின் சோதனை நடவடிக்கைகள் தொடராக இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது வடக்குக் கிழக்குத் தமிழர்கள் கண்டபாட்டில் கைது செய்யப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடாத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 27 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகப் புறக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறியமையால் கைது செய்யப்பட்டதாகவும் இவர்கள் புறக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை தெஹிவளை மற்றும் ஹறக்தொடுவப் பிரதேசத்திலும் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது சந்தேகத்தின் பேரில் 7 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவாகள் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச் சந்தேக நபர்கள் தங்கியுள்ள பிரதேசத்திற்கு எதற்காக வந்தனர் என்பது தொடர்பில் தெளிவான பதிலை வழங்காததன் காரணமாக இவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று அதிகாலை 3 மணி தொடக்கம், பொலிஸாரும் படையினரும் கூட்டாக இணைந்து கொழும்பு, மருதானை, கோட்டை, கிரான்பாஸ் ஆகிய இடங்களில் தேடுதல் நடத்தினர்.

இதன்போது வடக்குக் கிழக்கிலிருந்து சென்ற பொதுமக்கள் கடுமையாகச் சோதனையிடப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-3)

# ஆழ ஊடுருவும் அணியினரின் தாக்குதல் முறியடிப்பு

## விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

வவுனியா பாலமோட்டையில் இராணுவத்தினரின் ஆழஊடுருவும் அணியினரின் தாக்குதல் நடவடிக்கை முறியடிக்கப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

பாலமோட்டையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆழஊடுருவும் அணியினர் கிளைமோர்த் தாக்குதல் நடாத்த முனைந்த போது விடுதலைப்புலிகள் அதனை முறியடித்தனர்.

இம்முறியடிப்பில் இராணுவத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதுடன் அவரின் சடலத்தையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

இராணுவத்தினரிடம் இருந்து கிளைமோர் மற்றும் ரி-56 ரக துப்பாக்கி என்பனவும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# ஐ.நாவின் பொதுச்சபையில் மகிந்தவின் உரை ரத்து

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றுவதற்காக நியூயோர்க்குச் செல்லவிருந்த பயணத்தை இரத்துச் செய்துள்ளார் என சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதிக்குப் பதிலாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அங்கு செல்லவுள்ளதாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இம் மாதம் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ள சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) வருடாந்த மாநாட்டில் ஜனாதிபதி பங்குபற்றி உரையாற்றவுள்ளார். இம் மாநாட்டிற்கு அழைக்கப்பட்ட ஆறு நாடுகளின் தலைவர்களில் ஜனாதிபதி மகிந்தவும் ஒருவர்.

மாநாட்டின் இறுதி நிகழ்வாக முதலாவது சர்வதேச தொழிலாளர் அமைப்பில் சிறந்த உழைப்பாளர்களுக்கான விருது முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதியும் நோபல் பரிசு பெற்றவருமான நெல்சன் மண்டேலாவுக்கும் பிறஸ்பேர்க் பல்கலைக்கழக பொருளாதாரப் பேராசிரியர் சார்மேலோ மேசா வாசோவுக்கும் வழங்கப்படவுள்ளது. (அ-5)

# கொழும்பு இறங்குதுறையில் இந்தியக் கப்பலில் தீ

(கொழும்பு)

கொழும்பு இறங்குதுறையில் திருத்த வேலைகளில் ஈடுபடுத்தப்பட்ட இந்தியக் கப்பல் ஒன்று நேற்றுப் பிற்பகல் திடீரென தீப்பிடித்துக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரைமணி நேரத்திற்குள் இத் தீ அணைக்கப்பட்டதாகவும் கப்பலில் இருந்த 5 பேர் சிறுகாயங்களுக்குள்ளாகியதாகவும் இறங்குதுறைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ந-3)

# கடத்தப்பட்ட மூன்றாவது நாளே...

இது குறித்து துணைவேந்தர் எஸ்.ரவீந்திரநாத்தின் குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, துணைவேந்தர் குறித்த உத்தியோகபூர்வ தகவல் எதுவும் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று தெரிவித்தனர். துணைவேந்தர் எஸ்.ரவீந்திரநாத் கடத்தப்பட்டமை குறித்து அவரது குடும்பத்தினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கடந்த வருடம் டிசம்பர் 20 ஆம் திகதி சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

அத்தோடு வெளிநாடுகளின் தூதுவர்களையும் மதகுருமார்களையும் இராஜதந்திரிகளையும் சந்தித்துத் துணைவேந்தரின் விடுதலையை வலியுறுத்தியிருந்தனர்.

அத்துடன் துணைவேந்தரால் ஏற்கனவே கொடுக்கப்பட்ட இராஜினாமா கடிதத்தை ஏற்றுக்கொள்ளும்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமும் ஜனாதிபதியிடமும் அவரது குடும்பத்தினர் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

எனினும் அவரது இராஜினாமா கடிதம் கடந்த ஜனவரி 15 ஆம் திகதியே ஜனாதிபதியால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனையடுத்துத் துணைவேந்தர் எஸ்.ரவீந்திரநாத் விடுவிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவியது.

ஆனால் இதுவரை காலமும் துணைவேந்தர் எஸ்.ரவீந்திரநாத் குறித்த எதுவித உத்தியோகபூர்வ தகவலும் அவரது குடும்பத்தினருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையிலேயே துணைவேந்தர் எஸ்.ரவீந்திரநாத் கடத்தப்பட்ட மூன்று நாள்களிலேயே படுகொலை செய்யப்பட்டதாக இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

துணைவேந்தர் எஸ்.ரவீந்திரநாத் உயிருடன் இல்லை என்ற விடயம் ஐக்கிய நாடுகள் சபை உயர் அதிகாரிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகள், பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், மதகுருமார் ஆகிய தரப்பினருக்குத் தெரியவந்துள்ளதாக கூறப்படுகின்றது.

இது குறித்து மேற்படி தரப்பினருடன் கேட்ட போது, அவர்கள் துணைவேந்தர் எஸ்.ரவீந்திரநாத் உயிருடன் இல்லை என்ற விடயத்தை உறுதிப்படுத்தினர். எனினும் அதனை நிரூபிப்பதற்கு போதிய ஆதாரங்கள் இல்லாததால் இது குறித்த தகவல்களை வெளியிடுவதில் சிக்கல்நிலையிருந்ததாகவும் அவர்கள் கூறினர்.

அத்துடன் துணைவேந்தர். எஸ்.ரவீந்திரநாத்தின் சடலம் வெலிக்கந்தையிலுள்ள பகுதி ஒன்றிலேயே மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது. (ந-5)

# மீன், மரக்கறி ஏற்றும் பாரவூர்தி தென்பகுதிக்குச் செல்ல அனுமதி

(கொழும்பு)

வடக்கிலிருந்து மீன் மற்றும் மரக்கறி வகைகளை தெற்கு நோக்கி ஏற்றிவரும் பாரவூர்திகளுக்கு மாத்திரம் அனுமதிப்பத்திரங்களை வழங்க பாதுகாப்புத் தரப்பினர் நேற்றுத் தீர்மானித்துள்ளனர்.

வடக்கிலிருந்து தென்பகுதிக்கு வரும் பாரவூர்திகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டாம் என வட பகுதி காவலரண்களிலுள்ள பாதுகாப்புத் தரப்பினருக்கு நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டது.

ஏற்கனவே வட பகுதியில் இருந்து தென்பகுதிக்குச் செல்லும் பாரவூர்திகள் சோதனையிடப்பட்டு அவற்றிற்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு வந்தது. எனினும் இந் நடவடிக்கை நேற்று முன் தினம் திடீரென இடைநிறுத்தப்பட்டமை தெரிந்ததே. (ந-3)

# வெளிநாட்டு உதவிகளில் தங்கியுள்ள வடபோர்முனை

முன்னர் எப்போதும் இல்லாதவாறு இலங்கையில் நடைபெற்றுவரும் மோதல்கள் தற்போது அனைத்துலகத்தின் கவனத்தை பெருமளவில் ஈர்த்துள்ளன. அனைத்துலக சமூகம் அதற்கு கொடுக்கும் முக்கியத்துவமும் அதிகமாகி வருகின்றது. இந்த முக்கியத்துவத்திற்கான காரணங்களாக இலங்கையில் அதிகரித்துள்ள மனித உரிமை மீறல்கள், ஐந்து வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வந்த அமைதிப் பேச்சுக்களில் இருந்த அனைத்துலக சமூகத்தின் தொடர்புகள், புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் பங்களிப்புக்கள் என்பன இருந்தபோதும் நான்காவது ஈழப்போரில் மேற்கொள்ளப்பட்ட தெரிந்தெடுக்கப்பட்ட தாக்குதல்களும் அதனை எதிர்கொள்ள தேவைப்படும் ஆயுதங்களும் அனைத்துலகத்தின் கவனத்தை மிகவும் ஈர்த்துள்ளது.

படையினரை பொறுத்தவரை அவர்கள் இரு உத்திகளுடன் செயற்பட்டு வருகின்றனர். அதாவது கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகளை அகற்றுதல், வடக்கில் தமது வசம் உள்ள பகுதிகளை தக்க வைத்தல். அதாவது கிழக்கில் தாக்குதல் சமர் (Offensive battle) வடக்கில் தற்பாதுகாப்பு சமர் (Defensive battle) என்ற இரு பொறி முறைகளுடன் படையினர் செயற்பட்டு வருகின்றனர்.

ஆனால் போர் என்பது ஒரு தரப்பின் உத்திகளுக்கு அமைய நடைபெறுவதில்லை. அதற்கு எதிரான உத்திகள் அல்லது அதனை முறியடிக்கும் உத்திகளை எதிர்த்தரப்புக்கள் வகுப்பது வழமை.

பிரகடனப்படுத்தப்படாத நான்காம் கட்ட ஈழப்போரை கருதினால் கடந்த ஆண்டு உக்கிரமடைந்த மோதல்களில் படையினர் பெரும் எடுப்பிலான பல படை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். இவற்றில் பெருமளவானவை கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், வடக்கிலும் ஒருசில நடவடிக்கைகள் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதற்குஉதாரணமாக கடந்த ஆண்டு ஒக்டோபரில் நடைபெற்ற முகமாலைச் சமரை குறிப்பிடலாம்.

விடுதலைப் புலிகளை பொறுத்தவரை கடந்த ஆண்டு ஆகஸ்டில் மூதூர் மீதான நடவடிக்கை , முகமாலையில் மேற்கொள்ளப்பட்ட சமர் அதேமாதம் அல்லைப்பிட்டியில் மேற்கொள்ளப்பட்ட ஈரூடகப் படையணியினரின் நடவடிக்கை என்பனவற்றை தவிர பெரும் எடுப்பிலான வலிந்த தாக்குதல்களை அதன் பின்னர் நடத்தவில்லை எனினும் கடந்த வாரம் நெடுந்தீவு கடற்படை கண்காணிப்புத் தளத்தின் மீதான நடவடிக்கையும் ஒரு வலிந்த தாக்குதல் நடவடிக்கையே. ஆனால் அது பெரும் எடுப்பிலான தாக்குதல் அல்ல. நெடுந்தீவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை ஒரு சிறப்பு படை (Commando style) நடவடிக்கை போன்றது.



விடுதலைப் புலிகளின் பெருமெடுப்பிலான தாக்குதல்கள் எதுவும் நடைபெறாத போதும் போர் மிகவும் தீவிரமான நிலையை அடைந்துவிட்டது போன்ற தோற்றப்பாடு உலக மட்டத்தில் உருவாகியுள்ளது. மேலும் அதிகளவான பொருட்செலவுகளுடன் அரசு மிகவும் நவீன ஆயுதங்களையும் தேடியும் வருகின்றது. இதற்கு இந்தப் போரில் விடுதலைப் புலிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட தாக்குதல் அணிகள் தான் முக்கிய காரணமாக அமைந்துள்ளன.

வான்படை ஈரூடகப் படையணி என்ற புலிகளின் இரு படையணிகள் நான்காவது ஈழப் போரில் தோற்றம் பெற்றுள்ளன. இந்த இரு படையணிகளுமே ஒட்டுமொத்த இராணுவ நிகழ்ச்சி நிரல்களை குழப்பி விட்டுள்ளதுடன் கண்ணுக்குத் தெரியாத படைவலுச் சம நிலையை அறியும் ஆவலையும் உலக அரங்கில் தோற்றுவித்துள்ளது எனலாம்.

அதாவது ஏனைய ஈழப்போர்களை போலல்லாது இந்த மோதல்களில் பிரயோகிக்கப்பட்ட ஆயுதங்களும், படையணிகளும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த ஆயுதங்களே அனைத்துலக மட்டத்தில் கவனங்களை தோற்றுவித்திருப்பதுடன் அவற்றின் புதிய பார்வைகளுக்கும் வழிவகுத்துள்ளன. மேலும் இதுவரை காலமும் எல்லா நாடுகளுடனும் பிடிகொடுக்காமல் நழுவி வந்த இலங்கை அரசை ஏதாவது ஒரு நாட்டின் ஆளுமைக்குள் சிக்கிக்கொள்ளவும் இது வழி வகுத்துள்ளது.

தற்போது அரசின் தெரிவாகியுள்ள ஆயுதங்களுக்கும், எதிர்கொள்ள வேண்டிய போருக்கும் ஏதாவது ஒரு நாட்டின் உதவிகள் நிச்சயமாக தேவை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அரசின் இந்த இராணுவத் தேவைகளுக்கு இந்தியாவே உகந்த நாடாக இருக்கும் என்பது பாதுகாப்புத் தரப்பினரது வாதம்.

அதற்கான காரணிகளாக இருநாடுகளின் எல்லைகளாக உள்ள கடற்பிதேசங்களின் பாதுகாப்பு, தமிழ் மக்கள் செறிவாக

*விடுதலைப்புலிகளின் பெரும் எடுப்பிலான சில தாக்குதல்கள் எதுவும் நடைபெறாத போதும் போர் மிகவும் தீவிரமான நிலையை அடைந்துவிட்டது போன்ற தோற்றப்பாடு உலக மட்டத்தில் உருவாகியுள்ளது.*

வாழும் இரு பகுதிகளையும் (வடஇலங்கை, தமிழ்நாடு) பிரிக்கும் பாக்குநீரிணையின் ஆளுமை இந்தியாவுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் என்பன உள்ளபோதும் இரு நாடுகளும் ஒரேவகையான கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் தற்போது புதிய காரணியாக சேர்ந்துள்ளது.

அதாவது இலங்கையும் இந்தியாவும் சோவியத் ஒன்றியம், இஸ்ரேல் போன்ற நாடுகளின் கனரக ஆயுதங்களை அல்லது அவற்றை ஒத்த ஆயுதங்களையே பெரும்பாலும் பயன்படுத்தி வருகின்றன. உதாரணமாக டோரா பீரங்கிப்படகுகள் அன்ரனோவ் -32 பி, அன்ரனோவ் 24 போக்குவரத்து விமானங்கள், மிக்-27, மிக்-29 ரக தாக்குதல் விமானங்கள் ,எம்ஐ 17, எம்ஐ-24 ,எம்ஐ-35 வகை உலங்கு வானூர்திகள், சாம் -16 ஏவுகணைகள், ராடர்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

எனவே இந்த ஆயுதங்களின் செயற்றிறன் மிக்க உபயோகத்திற்கு இந்தியாவுடனான பாதுகாப்பு மற்றும் ஆயுதத் தொடர்புகள் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்பது படைத்தரப்பினரின் கருத்து. உதாரணமாக 2000 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட மிக்-27 ரக தாக்குதல் விமானங்கள் அதன் ஓய்வு நிலையை அடைந்த போதும் அதனை மறுசீரமைக்கும் பணிகளை இந்தியாவில் மேற்கொள்வதற்கே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஏனெனில் இந்தியா அதிகளவில் பல வகையான மிக் ரக விமானங்களை பயன்படுத்துவதுடன், அதனை தயாரிப்பதற்கான அனுமதியையும், அவற்றை மறுசீரமைக்கும் வசதிகளையும் கொண்டுள்ளது. மேலும் அருகில் உள்ள நாடு குறைந்த செலவுகள், இலகுவான போக்குவரத்து என்பனவும் அதற்கான ஏனைய காரணங்கள்.

எனவேதான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருந்தது. எனினும் தமிழ் நாட்டில் இருந்து கடுமையான எதிர்ப்புக்கள் தோன்றக்கூடும் என்பதனால் அவை பின்னர் உக்ரேன் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டன. ஆனால் தற்போது அரசினால் கொள்வனவு செய்யப்பட உள்ள மிக்-29 ரக வான் தாக்குதல் விமானங்கள் ,ஏவுகணைகள், நவீன ராடர்கள் என்பவற்றிற்கான பயிற்சிகள், பராமரிப்பு தொழில்நுட்ப உதவிகள் போன்றவற்றிற்கு மிகவும் அதிகளவில் வெளிநாட்டு உதவிகள் தேவைப்படும் என்பது அரசுக்கு தெரிந்த விடயம். உதாரணமாக சவூதிஅரேபியா தனது எப்-16, எப்-15 ரக தாக்குதல் வான்கலங்களின் உபயோகத்திற்கு அமெரிக்காவை சார்ந்திருப்பதை குறிப்பிடலாம். எனவே தான் தமது படைக்கலப் பெருக்கத்திற்கும் அதன் உபயோகத்திற்கும் ஏதாவது ஒரு வலிமை மிக்க நாட்டை நாடவேண்டிய தேவை அரசுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.



MI-17V5 ரக ஹெலி

மேலும் வடபோர்முனையில் உள்ள பெரும் தொகை படையினருக்கான விநியோகத்தை சீராக்குவதற்கும் அதனைத் தக்கவைப்பதற்கும் இந்தியாவினது அல்லது வேறு ஒரு நாட்டினது உதவிகள் தேவை என்ற நிலையும் தற்போது ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் அரச விமானப்படையை பொறுத்தவரை அதனிடம் 02 ஹெர்க்யூல்ஸ் (C-130 K(ex-RAF Hercules- C1) கனரக சரக்கு விமானங்களுடன் சிறிய எண்ணிக்கையான அன்ரனோவ்-32 B விமானங்களும் உள்ளன.

இவை தவிர சில அன்ரனோவ் -24 வகை விமான்ங்கள் வாடகைக்கும் அமர்த்தப்பட்டுள்ளன. அவற்றினால் படையினருக்கான அவசர உதவிகளை மட்டுமே மேற்கொள்ள முடியும். படையினருக்கான விநியோகங்கள் மற்றும் போக்குவரத்துக்களை மேற்கொள்ளக் கூடிய கனரக உலங்குவானூர்திகளின் நிலைமையும் இதேபோன்றதே. MI-17 ரக உலங்கு வானூர்திகளின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் அதை ஈடுசெய்யும் முகமாக தற்காலிக அடிப்படை

*தமது படைக்கலப் பெருக்கத்திற்கும அதன் உபயோகத்திற்கும் ஏதாவது ஒரு வலிமை மிக்க நாட்டை நாடவேண்டிய தேவை அரசிற்கு இன்று ஏற்பட்டுள்ளது.*

யில் இரு MI -17 உலங்குவானூர்திகளை இந்திய அரசிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ளதுடன் 2006ஆம் ஆண்டு ஜூலையில் இலங்கை அரசினால் இரு MI -17 V5 உலங்கு வானூர்திகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

எனினும் இவை அவசர தேவைகளுக்கே பயனுள்ளது என்பதுடன் வட போர் முனையில் உலங்குவானூர்திகளின் பயன்பாடும் மட்டுப்படுத்தப்பட்டவை.

படையினரின் வான்வழி வழங்கலிற்கு ஏற்பட்டுள்ள மற்றும் ஒரு அச்சுறுத்தல் விடுதலைப் புலிகளின் பீரங்கிப் படையணியாகும். பூநகரியில் உள்ள விடுதலைப் புலிகளின் 130 மி.மீ பீரங்கியின் தூரவீச்சுக்குள் பலாலி வான்படைத்தளம் உட்படுவதனால் கடும் சமர் ஏற்படும் காலங்களில் வான் படையினர் அதனை பயன்படுத்துவது மிகவும் சிரமமானது.

எனவே இறுக்கம் அடைந்துள்ள வட போர் முனையில் உள்ள பெரும் தொகை படையினருக்கான விநியோகத்திற்கு முக்கிய பங்காற்றக் கூடியது என தற்போது கருதப்படுவது கடற்படையே. வடபோர் முனையில் நடைபெறும் தற்காப்புச் சமருக்கு தேவையான உயிர் நாடியான விநியோகத்தின் பெரும்பகுதி கடல் விநியோகத்தில்தான் தங்கியுள்ளது.

புல்மோட்டை தொடக்கம் நாகர் கோவில் வரையிலான கடற்பகுதிகள் ஆபத்து நிறைந்ததாக நாளுக்கு நாள் மாறி வரும் வேளை கடந்த வாரம் நெடுந்தீவில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கை மேற்குப்புற கடல் விநியோகத்திற்கும் பெரும் சவால்களை ஏற்படுத்தியுள்ளன.

மன்னாருக்கும் காரைநகருக்கும் இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட விநியோகங்கள் படையினரின் குடாநாட்டு நெருக்கடிகளுக்கு ஓரளவு உதவி வருவதுண்டு.

கடந்த வருடம் முகமாலையிலும், வட போர் முனைக் கடலிலும் மோதல்கள் உக்கிரமடைந்த போது காயமடைந்த படையினர் காரைநகரில் இருந்து மன்னார் ஊடாகவே நகர்த்தப்பட்டிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் பீரங்கிகளின் தூர வீச்சுக்குள் பலாலி கூட்டுப்படைத்தளமும், அதன் ஓடுபாதையும் உட்பட்டிருப்பதால் முக்கிய தளப்பகுதியையும் , இராணுவ மருத்துவமனையையும் காரைநகருக்கு மாற்றும் திட்டமும் முன்னர் பரிசீலிக்கப்பட்டு வந்தது.

ஆனால் விடுதலைப் புலிகளின் படையணி ஏறத்தாழ 16 கடல் மைல்களை கடந்து சென்று நெடுந்தீவில் தாக்குதலை மேற் கொண்டது. படையினரின் இந்த உத்திகளை மறு பரிசீலனை செய்யவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

மேற்குப்புற விநியோக மார்க்கங்களை அல்லது அங்குள்ள படையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பெருமளவான படையினர் தேவை என்ற நிலை தற்போது எழுந்துள்ளது.

எனவே தான் நெடுந்தீவு கடற்படை கண்காணிப்பு தளத்தின் மீதான தாக்குதலை யாழ். குடாநாட்டை மீட்பதற்கான சமரின் ஒரு படி என பல ஆய்வாளர்கள் கணிக்க தலைப்பட்டுள்ளனர்.

அதாவது பெரும் சமர்கள் அல்லாது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஒரு சில தாக்குதல்கள் ,அதற்கு பயன்படுத்தப்பட்ட படையணிகள் என்பன களத்தின் நிலைமைகளை முற்றாக மாற்றி அமைக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளதுடன், தற்பாதுகாப்பு சமருக்காக வெளிநாடுகளிடம் இராணுவ உதவிகளை கோரவேண்டிய நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டு மக்களை மீறி செய்யப்படும் எந்த ஆயுத உதவிகளும் அங்குள்ள அரசியலில் மாற றங்களை ஏற்படுத்தக்கூடியன.

எனினும் அழிவைத் தரும் ஆயுதங்கள் அற்ற ஆயுதங்களின் விநியோகம் என்ற கருத்தின் அடிப்படையில் அது நவீன ராடர்கள், கடற்படைக்கப்பல்கள் , எம்ஐ-17 வகை உலங்கு வானூர்திகள் போன்றவற்றை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

ஆனால் அழிவைத்தரும் ஆயுதங்கள் அற்ற ஆயுதங்கள் என்ற உதவிகள் கூட போரிடும் இரு தரப்புக்களினதும் இராணுவ சம நிலைகளில் அல்லது படை பலத்தில் கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை.

உதாரணமாக பொஸ்னிய - சேர்பிய போரில் பொஸ்னிய - சேர்பியர்களுக்கு இடையிலான 49-51 விகிதப்படைச் சமவலு கூட அரசியல் தீர்வு முயற்சிகளை சீர் குலைத்து விடும் என நம்பப்பட்டது.

நன்றி : வீரகேசரி வாரவெளியீடு

எனவே சேர்பிய அரசின் படை வலுவை குறைப்பதையும் பொஸ்னியர்களின் படை வலுவை மேலேங்கச் செய்வதையும் மையமாகக் கொண்டே நேட்டோ படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த முயற்சியில் பொஸ்னிய படைகளின் பலத்தை அதிகரிப்பதற்காக அழிவைத் தரும் ஆயுதங்கள் தவிர்ந்த ஏனைய வழிகளிலான உதவிகள் என்ற அடிப்படையில் புலனாய்வுத் தகவல்களை வழங்குதல் , பயிற்சியளித்தல், போக்குவரத்து உலங்குவானூர்திகளை வழங்குதல் போன்றவற்றை நேட்டோ படைகள் வழங்கியிருந்தன.

இது இராணுவ சமநிலையில் கணிசமான தாக்கத்தையும் ஏற்படுத்தியிருந்தது. எனவே தற்போது இந்தியா வழங்க முன்வந்துள்ள உதவிகளும், ஏனைய நாடுகளிடம் அரசினால் கோரப்படும் உதவிகளும் வடபோர் முனையை கருத்திற்கொண்டு எடுக்கப்படும் முயற்சிகளே ஆகும்.

## இன்று ஒரு தகவல்

# நான்கு பிள்ளைகள்

ஆன்மீகப் பேச்சாளர் ஒருவர் எனக்குச் சம்பந்தமில்லாத ஒரு கேள்வியை என்னிடம் கேட்டார். அது என்ன கேள்வி என்றால்,

"தசரதனுக்கு ஏன் நாலு பிள்ளைகள் பிறந்தார்கள்?"

"எனக்கு என்ன தெரியும்?... இது தசரதனைப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வி அல்லவா?..." என்றேன்.

"தசரதர் கேட்டது ஒரு பிள்ளை தான்" என்றார். "தனக்குப்பின் நாட்டை ஆளவும் தான் நல்ல கதி அடைய உதவவும் தசரதன் கேட்டது ஒரு பிள்ளை தான்!... அதே மாதிரி தேவர்கள் கேட்டதும் இராவண வதம் செய்ய ஒரு ராமன் தான்"

அப்படி இருக்கும்போது எதற்கு நாலு பிள்ளைகள்...? அதற்கு அவர் என்ன விளக்கம் கொடுக்கிறார் என்றால்... "இந்த உலகத்திலே நாலு வகையான தர்மங்கள் உண்டு... அந்த நாலு வகையான தர்மங்களையும் மக் களுக்கு அனுசரித்துக் காட்டுவதற்காகத்தான் அந்த நாலு சகோதரர்கள் தோன்றினார் களே தவிர இராவணனை வதம் செய்வதற்காக அல்ல"... என்றார் அவர்.

அது என்ன நாலு வகையான தர்மம்? முதலிலே வருவது சாமானிய தர்மம். அதாவது பிள்ளைகள் பெற்றோர்களிடம் எப்படி நடந்துகொள்வது என்பது பற்றி. சீடன் குருவிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்... மனைவி, கணவனிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்...? இது மாதிரி உள்ளதெல்லாம் சாமானிய தர்மங்களே!

சாமானிய தர்மங்களை ஒழுங்காக செய்து கொண்டு வந்தால் கடைசியிலே ஒருநிலை வருமாம். அந்த நிலையிலே இறைவன் அடி ஒன்றே நிரந்தரம்... மற்ற எதுவும் சதமல்ல என்கிற நிலை வருமாம்!

அதனாலேதான் குலசேகர ஆழ்வார் சொன்னார் "இந்திரலோகம் ஆளும் அச்சுவை தரினும் வேண்டேன்" என்று.

"தாமரை மலரைப் போன்ற உன் பாதங்களைச் சுற்றி நான் தேன்வண்டு போல் வந்துகொண்டிருக்க வேண்டும்" என்றாராம் கிருஷ்ணலீலா தரங்கிணி ஆசிரியர்.

இத்தகைய தர்மத்துக்கு "சேஷ தர்மம்" என்று பெயர். இதைத்தான் அனுசரித்துக் காட்டினான் இலக்குவன். மூன்றாவது தர்மம் "விசேஷ தர்மம்" அதாவது தூரத்திலே இருந்து கொண்டே எப்பொழுதும் இறைவன் ஞாபகமாக இருப்பது!

சேஷ தர்மத்தைவிட விசேஷ தர்மம் கடினம். பகவானுக்குப் பக்கத்திலேயே இருந்துகொண்டு அவன் ஞாபகமாக இருப்பது கஷ்டம் அல்ல. ஆனால் தூரத்திலே இருந்துகொண்டு அவனையே நினைப்பது என்பது கடினம்.

இதைச் செய்துகாட்டியவன் பரதன்.

நாலாவது தர்மம் "விசேஷ தர தர்மம்"....

இறைவனை விட அவனுடைய அடியார்களுக்கு தொண்டு செய்வது இந்தத் தர்மம். இதைக் கடைப்பிடித்துக் காட்டியவன் சத்ருக்கனன். அதனாலேதான் பரதனை விடாமல் பின்பற்றி அவனுக்குத் தொண்டுகள் செய்தான். ஆக, இப்படி நாலு வகையான தர்மங்களையும் கடைப் பிடித்து மக்களுக்குக் காட்டுவதற்காகத்தான் இறைவன் நான்கு அவதாரமாகத் தோன்றினார். இவ்வாறு விளக்கம் கொடுத்தார் அந்த ஆன்மீகப் பேச்சாளர். "என்னதான் நாலுவகையான தர்மங்களை அனுசரித்துக் காட்டினாலும் இன்று மக்கள் எந்த அளவுக்கு அது மாதிரி நடந்துகொள்கிறார்கள்?" என்று கேட்டார் ஒரு இராமாயண சொற்பொழிவாளர்.

ஒருநாள் அவர் பேசுவதற்காகப் புறப்பட்டார். "எங்கே புறப்படுகிறீர்கள்?" என்று கேட்டார் அவரது மனைவி. "இராமாயண சொற்பொழிவு நடத்தப்போகிறேன். நீயும் வா" என்று கூப்பிட்டார் அவர்.

"நான் வரவில்லை. நீங்கள் போய்விட்டு வாருங்கள்". என்றார் மனைவி. "என்ன இப்படிச் சொல்கிறாய்?... அன்று இராமன் காட்டுக்குப் போகிறேன் என்று சொன்னதும் சீதை உடனே தானும் வருகிறேன் என்று புறப்படவில்லையா?..." என்று கேட்டார் இராமாயணப் பேச்சாளர்.

'சீதை ஒன்றும் விபரம் தெரியாமல் புறப்படவில்லை... வீட்டிலே வயதான மாமனார்... மாமியார் கள்... மைத்துனர்கள்... இவ்களுக்கெல்லாம் சமைத் துப் போட்டு காப்பாற்ற வேண்டியிருக்கு... இதைவிட காட்டுக்குப் போய்விடுவது நல்லது' என்று சீதை நினைத் ததில் தப்பு இல்லை என்றார் வீட்டுக்கார அம்மா.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# யுத்த நிறுத்த ஒப்பந்தம் நீடிக்கும் வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

இலங்கை வெளிவிவகார அமைச்சர் 2002 இல் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கம் எதுவும் அரசாங்கத்துக்கு இல்லையென்றும், மிக விரைவில் புலிகளை பேச்சுவார்த்தையில் சந்திக்க உள்ளதாகவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூறியுள்ளார்.

மே மாதம் 31ஆம் திகதி இலங்கைப் பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர், களநிலையில் யுத்த நிறுத்தம் பிரதிபலிக்காத படியால் இன்னும் இரு கிழமைகளில் யுத்தநிறுத்தம் முறிவடைந்து போகலாம் என கூறினார். நான் வெளிப்படையாகக் கூறுவதாவது, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கம் எதுவும் அங்கு இல்லையென்றும் அதைப் பொருட்படுத்த வேண்டிய அவசியம் இல்லையென்றும் வெளிவிவகார அமைச்சர் றோகித போகெல்லாகம சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய பாதுகாப்பு மாநாட்டிற்கு சென்ற வேளையில் றொயிட்டருக்களித்த செவ்வியில் தெரிவித்துள்ளார்.

நாம் எப்பொழுதும் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு வரும்படி ஊக்குவிக்கின்றோம். மிக விரைவில் பேச்சுவார்த்தை நடக்கக்கூடிய சாத்தியம் உண்டு எனக் கூறினார். 'நாம் இன்றைக்கும் பேச்சுவார்த்தைக்கு ஆயத்தமாக உள்ளோம்' அவர்கள் இம் மாதத்திலேயே பேச்சுவார்த்தைக்கு வருவார்களானால் நாம் மகிழ்ச்சியடைவோம். இந்தப் பொறுப்பினை நாம் விடுதலைப் புலிகளிடமே விட்டுள்ளோம் என்று தெரிவித்தார். (அ)

# குளிர்பானங்களை அருந்துவதால் கடுமையான நோய்க்கு ஆளாக நேரிடும்

குழந்தைகள் அதிகளவில் குளிர்பானங்கள் குடிப்பது பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பது ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது. கண்ணாடிப் போத்தல், பிளாஸ்டிக் போத்தல் மற்றும் டின்களில் அடைத்து குளிர்பானங்கள் விற்கப்படுகின்றன.

இதேபோல ஜாம், பழச்சாறுகளும் போத்தல்களில் மற்றும் ரின்களில் அடைத்து விற்கப்படுகின்றன. இவை நாள் கணக்கில் இருப்பில் வைத்து விற்கப்படுகின்றன.

எனவே இவை ஈஸ்ட், பக்டீரியா மற்றும் பூஞ்சை போன்றவற்றால் கெட்டுப்போகாமல் தடுக்க சோடியம் பென்சோ யேட் என்ற இரசாயனம் சேர்க்கப்படுகிறது. இந்த இரசாயனம் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் உள்ள ஷெப்பீல்ட் பல்கலைக்கழக ஆய்வகத்தில் இது குறித்து ஆய்வு நடத்திய பீட்டர் பைப்பர் என்ற விஞ்ஞானி அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டுள்ளார். பீட்டர் பைப்பர் கூறியதாவது, குளிர்பானம் மற்றும் உணவுப் பொருள் கெட்டுப் போகாமல் தடுப்பதற்காக சேர்க்கப்படும் சோடியம் பென்சோயேட், கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. இவை டி.என்.ஏ.அணுக்களில் உள்ள மைட்டோ காண்ட்ரியா என்ற பகுதியை பாதிக்கின்றன.

மைட்டோ காண்ட்ரியா தான் இந்த அணுக்களுக்கு ஒட்சிசன் பெற்றுத் தருகிறது. இவை கடுமையாக பாதிக்கப்படும் போது டி.என்.ஏ. அணுக்களை முடக்கிவிடும். இதனால் பார்கின்சன்ஸ் மற்றும் நரம்பு தொடர்பான கடுமையான நோய்கள் ஏற்படக்கூடும். சோடியம் பென்சோயேட், கல்லீரலையும் பாதிக்கக்கூடியது. சோடியம் பென்சோயேட் குறித்து ஐரோப்பிய யூனியனிலும், அமெரிக்காவிலும் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் நடத்திய ஆய்வுகள் மிகப் பழமையானவை.

தற்போதைய நவீன ஆராய்ச்சி முறையில் பரிசோதிக்கும்போதுதான், அந்தப் பழைய ஆய்வுகள் போதுமான பாதுகாப்புக் கொண்டது அல்ல என்பது தெரியவந்துள்ளது. பெரியவர்களைவிட குழந்தைகள் அதிகளவில் இத்தகைய குளிர்பானங்கள், ஜாம் மற்றும் பழச்சாறுகளை அதிகளவில் விரும்பிசாப்பிடுகின்றனர். அதிகளவில் இவற்றை உட்கொள்ளும்போது எதிர்காலத்தில் கடுமையான நோய்களுக்கு அவர்கள் ஆளாகக் கூடும். அந்தக் குழந்தைகளை நினைத்தால் தான் எனக்கு கவலையளிக்கிறது. இவ்வாறு பீட்டர் பைப்பர் தெரிவித்துள்ளார். (அ-5)

## ஆண்டுப் பொதுக்கூட்டமும் மாணவர் மதிப்பளிப்பும்

காரை மத்தி மேம்பாட்டுக் கழகத்தின் இரண்டாவது ஆண்டுப் பொதுக்கூட்டமும் மாணவர் மதிப்பளித்தல் நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு விக்காவில் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கழகத்தின் தலைவர் ந. கிருஸ்ணபவன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக காரைநகர் உதவி அரச அதிபர்இ.த ஜெயசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு காரைநகர் பிரதேச பாடசாலைகளில் கல்வி பயின்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களிற்கும், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குமான மதிப்பளித்தல் நிகழ்வு காரைநகர் சிவகாமி அம்மன் கோவிலடியைச் சேர்ந்தவரும் கனடாவில் வசிப்பவருமாகிய தர்மலிங்கம் தங்கம்மா தம்பதியினரின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

அத்துடன் நடப்பாண்டிற்கான புதிய முகாமைக் குழுவும் தெரிவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-246)

## இராசிபலன்

04.06.2007
வைகாசி 21 திங்கட்கிழமை
திருதியை முற்பகல் 8.21 வரை
பூராடம் மு.ப.11.10 மணிவரை
இராகுகாலம் 07.22-08.52 மணிவரை
சுபநேரம் 11.52-01.22 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

**மேடம்:-** எதிர்பாராத அச்சம், தந்தை வழி உறவு, காரியதாமதம், பணவிரயம்.

**இடபம்:-** வாகன பயம், சரீர பீடை, காரிய தடங்கல், மாதர் உதவி.

**மிதுனம்:-** களஸ்திர நன்மை, மனோ தைரியம், சயனசுகம், தனவருவாய்.

**கடகம்:-** தடைப்பட்ட காரியம் சித்தியாகும், நோய் குணமடையும், தனவருவாய், பெரியோர் உதவி.

**சிங்கம்:-** அஜீரண வியாதி, காரிய இடையூறு, சொத்துப் பிணக்கு, குடும்பக் கவலை.

**கன்னி:-** ரோக பயம், பிரயாண சுகம், தாய்வழி உறவு, முயற்சி தாமதம்.

**துலாம்:-** நற்கீர்த்தி, போசன சுகம், பிரயாண சுகம், தேகநலன்.

**விருச்சிகம்:-** போசன சுகக்குறைவு, அதிக செலவு, காரியதாமதம், மரியாதைக் குறைவு.

**தனுசு:-** தெளிந்த சிந்தை, தொழில் விருத்தி, ஆரோக்கிய நிலை, அன்பளிப்பு.

**மகரம்:-** வீண் அலைச்சல், சுபசெலவு, சோம்பல் நிலை, சயன சுகக்குறைவு.

**கும்பம்:-** எடுத்த கருமங்கள் கைகூடும், சயன சுகம், உறவினர் வருகை, பெருமையடைதல்.

**மீனம்:-** ஆரோக்கிய நிலை, அதிக பிரயாசை, மனமகிழ்ச்சி, அன்பளிப்பு.

-வளவன்

## புற்றுநோயாளர்களுக்கு போசாக்குணவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கதிரியக்க சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருட நிறைவு விழாவையொட்டி எதிர்வரும் 9ஆம் திகதி கொழும்பு இராமகிருஷ்ண மிசனினால் யாழ்.மாவட்டத்தில் வசிக்கின்ற சமுர்த்தி நிவாரணம் பெறுகின்ற மற்றும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட புற்றுநோயாளர்களுக்கு போசாக் குணவுப் பொதி வழங்கவுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட வகைப் புற்றுநோயாளர்கள் உடனடியாகத் தங்கள் பெயர் விபரங்களை வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்கள் என்பதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் சென்று யாழ். போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பகுதியில் 8ஆம் திகதிக்கு முன்பாக பதிவு செய்யுமாறு கேட்கப்படுகின்றனர். (அ)

## வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

பொலிகண்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தின் முதன்மை ஆசானும், அமரருமாகிய சாண்டோ எம்.துரைரட்ணம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத் துக்கான வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த முதலாம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

இவ்வாட்டத்தில் வடமராட்சியில் உள்ள 13 முன்னணி கழகங்கள் பங்குபற்றுகின்றன. இவ்வாட்டத்தின் இறுதியாட்டம் எதிர் வரும் 6ஆம் திகதி புதன்கிழமை மாலை மூன்று மணியளவில் நடைபெறும். (அ)

## மகோற்சவம்

புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 7 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

21ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8மணிக்கு தேர்த் திருவிழாவும், 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (அ-35)

> நோயின் பசியும் தீர வேண்டும். ஆடும் உயிரோடிருக்க வேண்டும். அந்த முறையில் உன் காரியங்களை நடத்து.
>
> -இத்தாலி

வலம்புரி

## ஆயுதக் கொள்வனவிற்கான ஒப்பந்தம் சமாதானத்திற்கான முயற்சியா?

இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு அரசு தயாராகவிருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த சில தினங்களுக்கு முன்னரும் தெரிவித்திருந்தார்.

எனினும் ஆயுதக் கொள்வனவை மேற்கொள்ளும் பொருட்டு சீனாவின் நிறுவனம் ஒன்றுடன் இலங்கை அரசு ஒப்பந்தம் செய்திருப்பதான செய்தியை இலண்டனிலிருந்து வெளிவரும் சஞ்சிகை ஒன்று வெளிப்படுத்தியுள்ளது.

விடுதலைப்புலிகளின் வான்வழித் தாக்குதலை முறியடிப்பதற்கு ஆயுதங்களைத் தந்துதவுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்தியாவிடம் கேட்டிருந்தார்.

குறித்த ஆயுதங்களை இந்தியா தர மறுத்தால், அதனைச் சீனாவிடமிருந்தோ அல்லது பாகிஸ்தானிடமிருந்தோ பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கோத்தபாய ராஜபக்ஷ இந்தியாவிடம் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த இந்தியத் தேசியப் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் எம்.கே.நாராயணன், இந்தியாவைத் தவிர வேறெந்த நாட்டிடமும் இலங்கை ஆயுதங்களைக் கொள்வனவு செய்யக் கூடாது எனக் கண்டிப்பாகக் கூறியிருந்தார்.

இந்நிலையில் இலங்கை அரசு ஆயுதக் கொள்வனவுக்கான ஒப்பந்தத்தை சீனாவிடம் செய்துள்ள தகவலை இலண்டனிலிருந்து வெளிவரும் சஞ்சிகை தெரியப்படுத்திவிட்டது.

இந்தியாவுக்குத் தெரியாமல் சீனாவிடம் ஆயுதக் கொள்வனவுக்கான ஒப்பந்தத்தைச் செய்து விட்டு, இந்தியா ஆயுதங்களைத் தர மறுத்தால் வேறு நாடுகளிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வோம் என இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய கூறியது இந்தியாவிற்குப் பெரும் ஆத்திரத்தை உண்டு பண்ணியுள்ளது.

அதேநேரம் இலங்கை வேறு நாடுகளிடம் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யக் கூடாது என இந்தியா கூறியதை தென்னிலங்கைப் பேரினவாத சக்திகளும் தென்னிலங்கை ஊடகங்களும் வன்மையாகக் கண்டித்துள்ளதுடன், இந்தியாவைக் கடுமையாகச் சாடியுமுள்ளன.

இலங்கை இறைமையுள்ள ஒரு நாடு-அவ்வாறிருக்கும்போது, பிராந்திய வல்லாதிக்கம் உடைய நாடென்பதற்காக இந்தியா எங்ஙனம் இலங்கையைக் கட்டுப்படுத்த முடியும்? என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இலங்கை சிங்கள மக்களுக்கேயுரியது. இங்குள்ள தமிழர்கள் நாம் தருவதைப் பெற்றுக் கொண்டு வாழவேண்டியதுதான் என்று ஹெலஉறுமய கூறுமாயின்,

இந்தியா தனது பிராந்தியப் பாதுகாப்புக் கருதி என்னைத் தவிர வேறு யாரிடமும் ஆயுதம் வேண்டக் கூடாதென இலங்கைக்குக் கூறுவதில் என்ன தவறு இருக்கின்றது? என வாதிப்பவர்களும் இருக்கவே செய்வர்.

எதுவாயினும் ஆயுதக் கொள்வனவில் இலங்கையரசு காட்டும் கரிசனை பெரும் யுத்தத்திற்கானதேயன்றி சமாதானத்திற்கானதல்ல என்பது உணர்தற்குரியதாகும்.

## வட-கிழக்கில் பணிகளை இடைநிறுத்த உலக உணவுத் திட்டம் முடிவு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்ட அமைப்பின் முன்னணி மனிதாபிமான தொண்டர் நிறுவனம் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் பகுதிகளில் தமது பணிகளை தற்காலிகமாக இடைநிறுத்த முடிபெடுத்துள்ளது.இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில்,

போதிய நிதிவசதியின்மை, பாதுகாப்பற்ற தன்மை, போக்குவரத்து வசதிகள் அற்ற நிலை போன்றவனவே தமது இந்த முடிபுக்குக் காரணம் எனத் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் எமது பணிகளை இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் போதிய நிதி இல்லாதுவிட்டால் அதற்கு முன்னரும் நாம் எமது பணிகளை நிறுத்தலாம். யாழ்.குடாநாடு போன்ற பகுதிகளில் எமது பணிகளை ஆற்றுவது மிகவும் கடினமானது.

இதனிடையே தமக்கும் போதிய நிதிகிடைக்காதுவிட்டால் தமது அமைப்பின் பணிகளும் இந்தப் பகுதிகளில் மட்டுப்படுத்தப்படும் என பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பட்டினிக்கு எதிரான நடவடிக்கை அமைப்பின் ஊடகத்துறை அதிகாரியான லுசி குறோஸ்ஜின் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் தொடர்பாகவே நாம் தற்போது கவனம் எடுத்து வருகின்றோம். இந்த மாவட்டங்களுக்கான தனியான உணவு விநியோகஸ்தராக அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கமே எதிர்வரும் வாரங்களில் செயற்படும்.

எனினும் பெரியளவான பிரதேசத்திற்கும் மிகவும் வசதிகள் குறைந்த பிரதேசங்களுக்குமான அதன் உணவு விநியோகத்தில் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கலாம். எங்களால் யாழ்.குடாநாட்டிற்கு இலகுவாக செல்ல முடியாதிருப்பதே அங்குள்ள உணவுப் பற்றாக்குறைக்கான முக்கிய காரணம்.

எனவே அங்குள்ள மக்கள் என்ன செய்கின்றார்கள்? என்பது தொடர்பாக எமக்கு எதுவும் தெரியாது. மட்டக்களப்பிலும் உணவுப் பற்றாக்குறையுண்டு. அங்குள்ள பாதுகாப்புக் குறைபாடுகள் அதற்கு உதவக் கூடியதாக இல்லை. மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். ஆனால் அந்தப் பகுதியில் ஒழுங்கான உட்கட்டுமானங்கள் இல்லை.எனவே அது மேலும் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் என்றார்.

உணவுப் பொருள்களை எடுத்து வருவதில் உள்ள தாமதமே அதன் பற்றாக்குறைக்கான காரணமாகும். வழங்கப்படும் உணவுகளின் தரம் குறைவானது. எனவே அவை உண்ண முடியாதவாறு மாற்றமடைந்து விடுகின்றன. இதுவும் பற்றாக்குறைக்கான காரணம் என முஸ்லிம் உதவி நிறுவனத்தின் பணிப்பாளர் அம்ஜட் மொகமட் சலீம் தெரிவித்துள்ளார். (ந-5)

## யாழ்.குடாநாட்டு மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் கொண்டு செல்ல முடியவில்லை
## உலக உணவுத் திட்ட அமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டிற்கு உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு குறைந்தளவு கப்பல்களேயுள்ளதனால் அங்கு வாழும் 5இலட்சம் மக்கள் பட்டினிச்சாவின் விளிம்பில் இருப்பதாக மனிதாபிமான அமைப்புக்கள் கடந்த வாரம் தெரிவித்துள்ளன.

இந்த அச்சுறுத்தலினால் யாழ்.குடாநாட்டில் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் 75 வீதத்தால் அதிகரித்துள்ளன. இது மக்களுக்கு பெரும் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்.குடாநாட்டில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களில் 20 வீதமான உணவுப் பொருள்களையே கொண்டு செல்லக் கூடியதாக உள்ளதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் உலக உணவுத் திட்டத்தின் பணிப்பாளர் ஜெப்ஃ ரப்ற டிக் தெரிவித்துள்ளதாவது, யாழ்.குடாவில் உள்ள மக்களிற்கு ஒரு மாதத்திற்கு ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப்பொருள்கள் தேவை. அரசினது கப்பல்களில் போதிய இடவசதிகள் இல்லாததால் உலக உணவுத் திட்டம் ஒரு மாதத்திற்கு 200 மெற்றிக்தொன் உணவுப் பொருள்களை தற்போது தருவித்து வருகின்றது.

எனினும் கடந்த மூன்று மாதங்களாக இடம்பெயர்ந்த மக்களுக்கான உணவு விநியோகம் மேலும் பாதிக்கப்பட்டுள்ளது. மார்ச் மாதம் 11 ஆம் திகதியிலிருந்து இன்று வரை 200 மெற்றிக்தொன் உணவுப் பொருள்களையே உலக உணவுத் திட்ட அமைப்பு குடாநாட்டிற்கு தருவித்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் தற்போது 250 மெற்றிக்தொன் உணவுப்பொருள்களே கையிருப்பில் உள்ளன. நிவாரண உணவுப் பொருள்களின் விநியோகம் கடந்த ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் வழங்கப்பட்ட பின்னர் உணவுப் பொருள்களின் பற்றாக்குறை காரணமாக அது இடைநிறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

இதனிடையே யாழ்.குடாநாட்டில் மட்டுமல்லாது மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளிலும் உணவுப் பற்றாக்குறை நிலவுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

மட்டக்களப்பில் உள்ள ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 597 இடம்பெயர்ந்த மக்களுக்கு அவசர உணவு உதவிகள் தேவைப்படுவதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது. கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளுக்குத் தேவைப்படும்உணவின் அளவில் 11 வீதமான உணவுப் பொருள்களே கடந்த மாதம் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அது மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)

## ரணிலுக்கு இனி அரசியல் எதிர்காலம் இல்லை-அமைச்சர் ராஜித

ரணில் விக்கிரமசிங்கவுக்கு இனி அரசியல் எதிர்காலம் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அவர் பதவி விலக வேண்டும். அவருக்காக நாம் கஷ்டப்பட்டு உழைத்தது போதும் என்று அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

மகரகமவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயகக் குழுவின் முதலாவது மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சிக்கென ஒரு பாரம்பரியம் உள்ளது. அதன் தலைமைப் பதவியை அலங்கரித்தவர்கள் எல்லோரும் அப்பாரம்பரியத்தை செவ்வனவே கடைப்பிடித்தனர். ஆனல் ரணில் விக்கிரமசிங்க அவ்வாறு இல்லை. அவருக்கு மக்கள் மீதும் நாட்டின் மீதும் அக்கறையில்லை.

கடந்த பொதுத் தேர்தலில் கூட நாம் அவருக்காக எவ்வளவு பாடுபட்டோம் என்பதைப் பலரும் அறிவர். தூக்கம் மறந்து; உணவு மறந்து அவருக்காகப் பாடுபட்டோம். தேர்தலுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு நான் அவருடன் உரையாடும்போது வடக்குக் கிழக்கு மக்களை மறந்து விட்டீர்களே. அவர்களின் வாக்குகள்தான் உங்கள் வெற்றியைத் தீர்மானிக்கப் போகின்றது என்று கூறினேன்.

ஆனால் அவர் என்ன சொன்னார் தெரியுமா? அதை சர்வதேசம் கவனித்துக் கொள்ளும் என்றார். ஆம், அன்ரன் பாலசிங்கம் இவரிடம் கதைத்து அதை பிரபாகரனிடம் கூறி அவர் மக்களை வாக்களிக்க வைப்பார் என இவர் நினைத்துக் கொண்டிருந்தார்.

தொடர்ச்சியாகத் தோற்கும் குதிரையை நம்பி எவராவது பந்தயம் கட்டுவார்களா? அந்த நிலையில்தான் இப்போது ரணில் உள்ளார். இனி இவரை நம்பி பிரயோசனமில்லை. தொடர்ந்தும் மக்களை ஏமாற்ற முடியாது என்ற நிலையில் நாம் பிரிவதற்கு முடிபெடுத்தோம்.

இவரை நம்பி கடந்த கால தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்காகப் பாடுபட்டவர்கள் வேலையில்லாது நடுத்தெருவில் நிற்கின்றார்கள். வென்ற பிறகு பார்ப்போம் என ஒவ்வொரு தேர்தலிலும் இவர்களைப் புறக்கணிக்க முடியாது. நாமும் ரணில் வெல்லுவார் என்று நம்பியிருந்த காலம் மலையேறிவிட்டது என்றார். (ந-5)

## மடுப் பிரதேசத்திற்கு
## ஜெயலத் தலைமையிலான ஐ.தே.கட்சிக் குழு செல்லும்

(கொழும்பு)

மன்னார் மடுப் பிரதேசத்தின் தற்போதைய நிலையை நேரடியாகக் கண்டறியும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தனாவின் தலைமையிலான குழு ஒன்று அங்கு விஜயம் செய்யவுள்ளது.அங்குள்ள மக்களுக்குத் தேவையான மனிதாபிமான தேவை குறித்தும் இக் குழு ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மடு மாதாவின் சரித்திர முக்கியத்துவம் மற்றும் ஆன்மிகத் தன்மைகளை கவனத்தில் கொண்டு அப்பிரதேசத்தினை புனித மற்றும் சமாதானப் பிராந்தியமாக பிரகடனப்படுத்தும்படி நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மன்னாருக்கான விஜயத்தினை மேற்கொள்ளும் இக்குழுவினர் மன்னார் ஆயர் அதி. வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப்பைச் சந்தித்துப் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-3)

# கப்பம் பெறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

## பலாலி படைத்தலைமை அறிவிப்பு

யாழ்.பிரதேசத்தில் தனியார் வர்த்தகர்களிடம் இருந்து சிலர் கப்பம் பெற்று வருவதாக தகவல் கிடைத்துள்ளது. அவ்வாறு கப்பம் பெறுபவர்களை கைது செய்து அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

கப்பம் பெறுபவர்களை கண்காணிக்கும் நடவடிக்கைகளை படையினர் தற்போது மேற்கொண்டுள்ளனர். கப்பம் பெறுவோருக்கு தங்குமிட வசதிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்குவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணம், மக்கள் மற்றும் உடைமைகளை எவ்வித தகுதியுமற்றவர்கள் கொள்ளையிடுவதற்கு எதிராக மக்கள் குரல் எழுப்பவேண்டும்.

இவ்வாறு கப்பம் பெற அல்லது கொள்ளையிட முயற்சிப்போர் பற்றிய தகவல்களை அச்சமின்றி கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

வலிகாமம் 222 2267,226 3398, தென்மராட்சி மற்றும் வடமராட்சி 226 3145, 226 3370, தென்மராட்சி தெற்கு 226 3146,2437357 ,226 4619. இப்படி அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சாவகச்சேரியில் ஒருவர் சுட்டுக்கொலை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்சு வீதியில் நேற்று மாலை 6 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இச் சம்பவத்தில் மிருசுவிலைச் சேர்ந்த சாந்தீபன் (வயது30) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. (ந-5)



முதல்வர் கருணாநிதிக்கு அவரது பிறந்த நாளையொட்டி வாழ்த்து மாலைக்கு நடுவே பணமாலையும் குவிந்தது.

# ஆயுதக் கொள்வனவில் நிபந்தனை விதிக்கும் உரிமை இந்தியாவுக்கு கிடையாது

## ஜே.வி.பி.பா.உறுப்பினர் ஆவேசம்

(கொழும்பு)

பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகளிடம் இலங்கை ஆயுதங்களைக் கொள்வனவு செய்யக்கூடாது என்று கூறுவதற்கு இந்தியாவிற்கு எந்தவிதமான உரிமையும் இல்லை.

இலங்கை இறைமையுள்ள நாடாகும். எந்த நாட்டிடம் ஆயுதங்களை கொள்வனவு செய்யவேண்டும் என்பதனை இலங்கை அரசாங்கமே தீர்மானிக்கவேண்டும்.

இந்த விடயத்தில் யாராலும் தலையிட முடியாது என்று ஜே.வி.பியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் வெளிவிவகாரச் செயலாளருமான விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகளிடம் இலங்கை ஆயுதங்களை கொள்வனவு செய்வதனை இந்தியா விரும்பவில்லை என்று கடந்த வாரம் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் தெரிவித்தமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ் விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது; பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகளிடம் இலங்கை ஆயுதங்களைக் கொள்வனவு செய்யக்கூடாது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கைக்குத் தேவையான உதவியை இந்தியா வழங்கும் என்றும் இருப்பினும் தற்காப்பு ஆயுதங்களை மட்டுமே வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் இந்த அறிவிப்பை ஏற்றுக் கொள்ள முடியாது. உலகில் எந்த நாட்டிடமும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் உரிமை இலங்கை அரசாங்கத்திற்கு இருக்கின்றது. இலங்கை இறைமையுள்ள நாடு என்பதனை இந்தியா புரிந்து கொள்ளவேண்டும்.

ஆயுதக்கொள்வனவுச் செயற்பாட்டில் நிபந்தனை விதிப்பதற்கு இந்தியாவிற்கு உரிமையில்லை. இலங்கையின் இறைமை மதிக்கப்படல் வேண்டும் என்பது இந்தியாவிற்குத் தெரியும்.

இவ்வாறான அறிவிப்புக்களை விடுப்பதன் மூலம் இந்தியா தான் பிராந்தியத்தில் வல்லரசு என்பதனை வெளிக்காட்ட முற்படுகின்றது. இந்தியாவுக்கு பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகளுட்ன் பிரச்சினைகள் இருக்கலாம்.

அதற்காக அந்த நாடுகளுடன் காணப்படுகின்ற உறவை முறித்துக்கொள்ள இலங்கை தயாராக இல்லை. இருப்பினும் இந்தியாவின் அறிவிப்பு குறித்து அரசாங்கத் தரப்பில் இதுவரை எந்த அறிவிப்பும் வெளியிடப்படாமை ஆச்சரியமளிக்கிறது.

பயங்கரவாதத்தை ஒழிக்கும் இலங்கையின் செயற்பாட்டிற்கு இந்தியா உதவ வேண்டும். அது இந்தியாவின் கடமையாகும். அதனை விடுத்து இலங்கை எந்த நாட்டிடமும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யக் கூடாது என்று கூறிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. (ந-5)

## யாழ்.மத்திய கல்லூரி அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரிக்கு அதிபர் நியமனம் வழங்குவதற்கு கல்வி அமைச்சினால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராஜா தெரிவித்தார்.

நாட்டிலுள்ள 38 தேசியப் பாடசாலைகளுக்கு அதிபர் நியமனத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதில் வட மாகாணத்தில் யாழ்.மத்திய கல்லூரியும், வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்திற்கும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.மேலதிக விபரங்கள் நாளைய வலம்புரியில் விரிவாக பிரசுரிக்கப்படும். (ந)

## நாய்களுக்கு தடுப்பு ஊசி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ்.நகர பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இன்று முதல் மூன்று தினங்கள் தடுப்பூசி ஏற்றல் இடம் பெறும்.இன்று காலை 8.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்திலும்; 11 மணிக்கு அத்தியடி பிள்ளையார் கோவிலடியிலும் ; 2 மணிக்கு இராசாவின் தோட்டம் அருள்மாதா சனசமூகநிலையத்திலும் வைத்து வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை காலை 8 மணிக்கு யாழ்.அடைக்கல அன்னை தேவாலயத்திலும் 11 மணிக்கு யாழ்.வீதி ,ஞானக்குழந்தை முன்பள்ளி முன்பாகவும் 2 மணிக்கு கொட்டடி முத்தமிழ் சனசமூகநிலையத்திலும் எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கன்னாதிட்டி காளி கோயிலடியிலும் ,11 மணிக்கு கொட்டடி மீனாட்சி சனசமூகநிலையத்திலும் 2 மணிக்கு லங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரியடியிலும் வைத்து நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-3)

## இலங்கை...

கைகள் கட்டப்பட்ட நிலையில் இவர்கள் சடலமாக கண்டெடுக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையில் சேவையாற்றிய சின்னராசா சண்முகலிங்கம் (வயது 32) மற்றும் உதவி நிறைவேற்று உத்தியோகத்தரான கார்த்திகேசு சந்திர மோகன் (வயது 27) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பில் 2 நாள் பயிற்சி பட்டறையொன்றில் கலந்து கொண்ட விட்டு மட்டக்களப்பு திரும்புவதற்காக நேற்று முன்தின இரவு புகையிரத நிலையத்தில் நின்ற வேளை விசாரணைக்காக எனக்கூறி வெள்ளைவானில் வந்தவர்களினால் இந்த இருவரும் அழைத்துச் செல்லப்பட்டதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளைத் தலைவர் கே.வசந்த ராஜா கூறினார். (ந-5)


### விற்பனைக்கு

நெல்லியடியில் இயங்கி வரும் தனியார் வாணிபம் (அழகு சாதனம், அலங்காரப், வீட்டு உபகரணப் பொருட்கள்) முற்று முழுதாக விற் றுத்தீர்த்தல். மொத்தமாக பெற றுக் கொள்வர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும். அத்துடன் கடைக்குரிய அலுமினிய சோட்கேஸ்களும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: 0777149459 (C-127)


# வறுமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டனில் பாரிய ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

லண்டன் தேம்ஸ் நதிக்கரையில் உலகளாவிய வறுமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்லாயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். பாராளுமன்ற' கட்டடத்திற்கு அண்மையில் உள்ள ஆற்றங்கரையில் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் மூன்று நிமிடங்கள் விசில்கள்,அலாரங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களைப் பயன்படுத்தி இரைச்சல் ஒலியை உருவாக்கினர்.

வெள்ளைப்பட்டி பிரசார நடவடிக்கையை நினைவுபடுத்தும் வகையில் அநேக ஆர்ப்பாட்டக்காரர்கள் வெள்ளை ஆடைகளை அணிந்திருந்தனர். எங்களால் காத்திருக்க முடியாது, வறுமைக்கு எதிராக குரல் கொடுங்கள் போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டக் காரர்கள் ஏந்தியபடி கோஷமெழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டதாக ஆர்பாட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். எதிர் வரும் 6 ஆம் 8 ஆம் திகதிகளில் ஜேர்மனியில் இடம் பெறும் ஜி-8 உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளும் தலைவர்களுக்கு வறுமை தொடர்பில் அவர்கள் அளித்த வாக்குறுதிகளை ஞாபகப்படுத்தும் இலக்கிலேயே இந்த ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## தமிழ் மக்களை வெளியேறக்...

தமிழ் மக்கள் பாதுகாப்பு மற்றும் பல்வேறு காரணங்களுக்காக கொழும்பில் தங்கியிருக்கலாம்.அது அவர்களின் தனிப்பட்ட விவகாரமாகும். அரசாங்கம் இவ்வாறானதொரு நடவடிக்கையை மேற்கொள்வது அம் மக்களின் அடிப்படை மனித உரிமையை மீறும் செயலாகும்.

அனைத்து இன மக்களும் நாட்டின் எந்த பிரதேசங்களிலும் வாழும் உரிமையைக் கொண்டவர்களாவர். அதனை யாரும் தடுக்க முடியாது.இவ்வாறு தமிழ் மக்களை கொழும்பில் இருந்து வெளியேற்றுவதன் மூலம் நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

இதன் மூலம் தமிழ் மக்கள் தெற்கில் சித்திரவதைகளுக்குள்ளாக்கப்படுகின்றார்கள் என்று புலிகள் மிக இலகுவாக சர்வதேசத்துக்கு கூறுவார்கள். அத்துடன் தற்போதைய நிலைமையானது சர்வதேச மட்டத்தில் பாரியளவில் அபகீர்த்தியை ஏற்படுத்தி விடும்.

இந்த சந்தர்ப்பத்தை புலிகள் சிறப்பாக பயன்படுத்திக் கொள்வார்கள். கொழும்பில் உள்ள வடக்குக் கிழக்கு தமிழ் மக்களை மீண்டும் வடக்குக்கிழக்கிற்குச் செல்லுமாறு கோருவதன் மூலம் வடக்குக் கிழக்கு மாகாணங்களானது தமிழ் மக்களின் தாயகப்பிரதேசம் என்பதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா? என்று கேட்கிறோம்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை ஐக்கிய தேசியக்கட்சி முழுமையாக எதிர்க்கிறது. அத்துடன் தமிழ் மக்களையும் விடுதலைப்புலிகளையும் பிரித்துப்பார்க்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

மக்களை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. அதற்கு கொழும்பில் இருந்து தமிழ் மக்களை வெளியேறக் கோருவது நியாயமற்ற செயற்பாடாகும். (ந-5)

## யப்பான்...

தின் பேச்சாளர் கருத்துக் கூறுகையில், எதிர்வரும் ஜூன் 9 ஆம் திகதி வரை கொழும்பில் தங்கியிருக்கும் அகாசி, அரச பிரதிநிதிகளையும் விடுதலைப்புலிக ளின் பிரதிநிதிகளையும் சந்திப்பதுடன் தனது பயணம் தொடர்பான ஊடகவியலாளர் மாநாட்டினையும் நடத்தவுள்ளார்.

அவர் கொழும்பில் தங்கியிருக்கும் போது மோதல்களில் ஈடுபட்டு வரும் இரு தரப்பினரினதும் தற்போதைய நிலைப்பாடுகளை அறிந்து கொள்வார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை அகாஷிக்கு இது 14 ஆவது தடவையான கொழும்பு விஜ யம் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## பழம்பெரும் நடிகை ரத்தினமாலா காலமானார்

(சென்னை)

பழம் பெரும் நடிகையும் பின்னணிப் பாடகியுமான ரத்தினமாலா நேற்று சென்னையில் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 76. எம்.ஜி.ஆர்., சிவாஜிகணேசன் ஆகிய நடிகர்களுடன் கதாநாயகியாக நடித்த ரத்தினமாலா பின்னணிப் பாடல்களையும் பாடியுள்ளார்.வீரபாண்டிய கட்டப்பொம்மன் படத்தில் சிவாஜிகணேசனுடன் ஜோடியாக நடித்த அவர் அதே படத்தில் போகாதே போகாதே என் கணவா! என்ற பாடலையும் பாடியுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக இருதய நோயினால் இவர் பாதிக்கப்பட்டிருந்தார். அவரது மறைவுக்கு நடிகர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர். (ந-5)






இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.